

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், புதுப்பேட்டை, பள்ளிப்பேட்டை, நேமம், காட்டுக்கூடலூர், தொழுப்பேடு, ஆத்தூர் ஆகிய ஊராட்சிகளில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவுமான எ.வ.வேலு வீதி, வீதியாக வாக்கு சேகரித்தார். உடன் மாவட்ட செயலாளர் சுந்தர், நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தரணிவேந்தன் மற்றும் கூட்டணி இயக்கத்தினர், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் இருந்தனர்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் :

இரண்டு தொகுதிகளிலும் தி.மு.க.வே வெற்றி பெறும்!

கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் பேச்சு!

மதுராந்தகம், அக். 1-

மதுராந்தகம், தாராபுரம் இரண்டு சட்டமன்ற இடைத்தேர்தலிலும் திமுகவே வெற்றிபெறும் என்று, மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலின் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்ற பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் கழக கொறடா எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

29.09.2026 செவ்வாய்க்கிழமை மாலை 7.00மணிக்கு அன்று, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், ஒரத்தி ஊராட்சி, கழக தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



ஆலோனைக் கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற எதிர்கட்சி கொறடாவுமான எ.வ. வேலு தலைமை வகித்தார்.

மாவட்ட செயலாளர் க.சுந்தர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். அவர் உரையாற்றும்போது...

கழகத் தோழர்கள், நிர்வாகிகள் அனைவரும் மனைவி, மக்களை விட்டு இரவு பகல் பாராமல் இங்கு நாம் பணியாற்றி வருகிறோம். இந்த உழைப்பிற்கு வெற்றிபெற்றால் மட்டுமே அர்த்தமுண்டு, எனவே அனைத்து நிர்வாகிகளுடன் முழுமூச்சுடன் ஒவ்வொரு வாக்காளர்களையும் நேரில் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்து நடைமுறைப்படுத்திய திட்டங்களை எடுத்துச் சொல்லியும், நான்கு மாதத்தில் தவெக அரசு தமிழக நிர்வாகத்தை சீர்குலைத்தும், மின்வெட்டு, விவசாயக் கடன் முழுமையாக ரத்து செய்யாதது, தலைமைச் செயலகம் கட்டுவது குறித்த குழப்பமான சூழ்நிலை, வாக்குறுதிகளை நிறைவேற்றாமை, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு மற்றும் மக்கள் தினசரி படும் அவலங்களை எடுத்துச் சொல்லி வாக்குசேகக்க வேண்டும்.

மக்கள் மனதில் நமது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உழைப்பையும், தியாகத்தையும் பதிவு செய்யவேண்டும், களத்தில் உள்ள தோழர்கள் தொய்வில்லாமல் முழு மூச்சாக பணியாற்ற வேண்டும். இடைத்தேர்தல் நடைபெறும் இரண்டு தொகுதிகளிலும் கழகமே வெற்றிபெறும்.

தவெக அரசு மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றாமலும், தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகள் எதையும் செய்யாமலும், ஐந்து மாத ஆட்சிகாலத்தில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு மற்றும் கஞ்சா புழக்கத்தில் முன்னணியில் உள்ளது.

இவ்வாறு கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் உரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன்.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், எஸ்.அம்பேத்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் த.உதயசூரியன், மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, எதிரொலிமணியன், கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், தொ.மு.ச. சௌந்தரராசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும்

கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து வீடு வீடாக பிரச்சாரம்!

முன்னாள் அமைச்சர்கள் செஞ்சி ராமச்சந்திரன், செஞ்சி மஸ்தான் வாக்கு சேகரித்தனர்!

அச்சிறுப்பாக்கம், அக். 1-

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. கழகத்தின் சார்பில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இவரை ஆதரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அகிலி, மாத்தூர், ஊனமலை, சிறுநாகலூர் ஆகிய ஊராட்சிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்து வருகின்றனர்.



அப்போது அகிலி ஊராட்சியில்முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர், செஞ்சி மஸ்தான் ஆகியோர் தலைமையில், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு, ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில்,

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், உள்ளிட்ட தி.மு.க.வினர்

அகிலி ஊராட்சியில் உள்ளஆதி திராவிடர் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று தி.மு.க. ஆட்சியில் செய்த பல்வேறு திட்டங்களை வாக்காளர்களிடத்தில் கூறி இத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்தற்கு

உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு கேட்டு திமுக வேட்பாளர் பரந்தாமனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என வலியுறுத்தி துண்டு பிரசுரத்தை வழங்கினர்.

இதில்அகிலிஊராட்சி நிர்வாகிகள் விஜயன், மார்ட்டின், விக்டர், வரத ராஜன்,செஞ்சி ஒன்றிய அவை தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி, மேல்மலையனூர் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட மதூர் கோட்டகயப் பாக்கம் விளாங்காடு திம்மாபுரம் உத்தமநல்லூர் திருமுக்காடு சீதாபுரம் ஊராட்சியில் பொறுப்பாளர் இராணிப் பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். இதில் ஒருங்கிணைப் பாளர் மாநில சுற்றுசூழல் அணி துணை செயலாளர் ஆர். விநோத்காந்தி ஒன்றிய செயலாளர் கோகுல கண்ணன் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மாவட்ட மகளிரணி தொண்டர்அணி அமைப்பாளர் கழகத்தினர் உடனிருந்தனர்.

குமாரபாளையம் எஸ்.பாலு மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சேலம், அக். 1-

சேலம் மாவட்டம் குமாரபாளையம் கழக முன்னணித் தோழரும் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிட்டவருமான சேர்மன் எஸ்.பாலு அவர்கள் நேற்று (30.9.2026) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்ததும் கழக முன்னணியினர் கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த சேர்மன் எஸ்.பாலு உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.



சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(29.09.2026)

த.வெ.க. ஆட்சியில் கொலை நகரமாகும் தலைநகரம்!

சென்னை திருவல்லிக்கேணியில், வீட்டில் அமர்ந்திருந்த இளைஞரை வெளியே வரவழைத்து படுகொலை செய்த கும்பல்.



குடும்பத்தினரின் கண்ணெதிரே இளைஞரை வெட்டிக்கொலை செய்த 4 பேர் கொண்ட மர்ம கும்பல் தப்பியோட்டம்.

கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய இரண்டு பெண்கள் உட்பட நான்கு பேரை தேடிவரும் போலீசார்.

த.வெ.க. ஆட்சியில் காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லை பரமக்குடியில் சம்பவங்கள்!

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசு மருத்துவமனையில் சண்டையை விலக்கச் சென்ற பெண் போலீஸ் தள்ளி கொலை.

பார்த்திபனூர் காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணியாற்றி வந்த கண்ணகி, பரமக்குடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது படுகொலை.

இரண்டு தரப்பினர் மோதிக் கொண்டதை பெண் காவலர் கண்ணகி தடுத்துள்ளார் அப்போது அவரை கீழே தள்ளி விட்டதில் பரிதாபமாக உயிரிழந்தார்.

திருவண்ணாமலை அருகே பயங்கரம்: கபடிவீரர் அடித்துக்கொலை!

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அடுத்த தென்கரும்பலூர் கிராமத்தில் கபடிவீரர் அடித்து கொலை ஆடு திருட முயன்றதாக கூறி கபடி வீரர் டேனீஸ் என்பவரை, 9 பேர் சேர்ந்து சரமாரியாக தாக்கியுள்ளனர்.

படுகாயம் அடைந்த டேனீஸ், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைப் பலனின்றி உயிரிழப்பு.

தருமபுரி – காரிமங்கலம் பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை!

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அருகே பொன்னேரி அரசு மாதிரிப் பள்ளியில் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த அரசுப் பள்ளி ஆசிரியர் திரிலோகசந்தர்மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு மாணவிகளிடம் ஆபாசமாக பேசி பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் வலியுறுத்தல் புகார் அளித்து 2 வாரங்களுக்குப் பிறகுதான் வழக்குப் பதிவு செய்துள்ளனர் ஆனால் இதுவரை கைது செய்யப்படவில்லை



குன்றத்தூரில் குளத்திற்கான இடத்தை ஆக்கிரமித்த த.வெ.க. நிர்வாகி!

தூய சக்தி என கூறிக்கொள்ளும் விஜய் & கோ வின் துர்நாற்றம்!

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் த.வெ.க. அமைச்சர் தென்னரசு உதவியுடன் குளத்திற்கான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்த த.வெ.க. நிர்வாகி குளத்தை ஆக்கிரமிப்பு செய்யும் தவெக நிர்வாகி அஜ்மீர் என்பவருக்கு ஆதரவாக அமைச்சர் தென்னரசு அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசுவதாக புகார் ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றி குளத்தை சுற்றியுள்ள பகுதியில் பூங்கா அமைக்க பொதுமக்கள் கோரிக்கை.

அமைச்சர் தென்னரசு பெயரைக் கூறி பணம் வசூல் வேட்டை, பல்வேறு சட்ட விரோத செயல்கள், அரசு நிலங்கள் ஆக்கிரமிப்புகள் செய்யப்படுவதாகவும் பொதுமக்கள் புகார்.

மயிலாடுதுறை அருகே அரசுப் பேருந்து நடத்துநர் படுகொலை!

மயிலாடுதுறை அருகே ஆனதாண்டவபுரம் பகுதியில் அரசுப் பேருந்து நடத்துநர் தமிழ்ச்செல்வன் என்பவர் படுகொலை பணிக்குச்சென்ற தமிழ்ச்செல்வன், இரவு வெகு நேரம் ஆகியும் வீடு திரும்பாத நிலையில் ரயில்வே கேட் அருகே சடலமாக மீட்பு அரசுப் பேருந்து நடத்துநர் தமிழ்ச்செல்வன் அரிவாளால் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



தாராபுரம் பேருந்து நிலையத்தில் அனுமதி பெறாமல் த.வெ.க. பேனர்!

தாராபுரம் பேருந்து நிலையத்தில் மக்கள் அதிகம் கூடும் இடத்தில் த.வெ.க. பேனர் அமைப்பு தாராபுரத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி அனுமதி இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள த.வெ.க. பேனர் விதிமுறைகளை மீறி வைக்கப்பட்டுள்ள பேனரை அகற்றக் கோரி தி.மு.க. சார்பில் தேர்தல் அலுவரிடம் மனு.

திருநெல்வேலியில் இரட்டைக் கொலை – பதற்றம்!

திருநெல்வேலி டவுன் மணிப்புரம் பகுதியில் பெட்ரோல் பங்க் உரிமையாளர் டால்டன், அவரது சகோதரர் நிக்கோலஸ் ஆகியோர் படுகொலை.

கோயில் நிலம் தொடர்பான பிரச்சனையில் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலில் டால்டன் , நிக்கோலஸ் ஆகியோர் குத்திக் கொலை.

சேலத்தில் மூதாட்டி அடித்துக்கொலை!

சேலம் மது குடிக்க பணம் கேட்டு, பணம் கொடுக்க மறுத்ததால் பாட்டியை கொலை செய்துவிட்டு வீட்டிலேயே மதுபோதையில் தூங்கிய இளைஞர் கைது.



தாராபுரம் இடைத்தேர்தலில் த.வெ.க. பணப்பட்டுவாடா!

சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெறும் தாராபுரத்தில் த.வெ.கவினர் பணப்பட்டுவாடா சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெறும் தாராபுரத்தில் த.வெ.க.வினர் ஓட்டுக்கு ரூ.5000 விநியோகம் செய்வதாக பொதுமக்கள் புகார் எழுந்துள்ளது.

கொளத்துப்பாளையம், பேரூர், கரையூர் பகுதிகளில் த.வெ.க.வினர் பண விநியோகம் செய்வதாக குற்றச்சாட்டு த.வெ.கவினர் பணம் விநியோகம் செய்வதாக முதியவர் ஒருவர் பேசும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரல்.

அரசு அலுவலகங்களில் லஞ்சம்.. த.வெ.க. ஆட்சியின் அவலம்...

"ஊழலற்ற அரசு" என வெற்று விளம்பரம் தேடும் தவெக ஆட்சியில், திருவள்ளூர் அரசு அலுவலகங்களில் தலைவிரித்தாடும் லஞ்ச லாவண்யம்! திருநின்றவூர் மின்வாரிய அலுவலகத்தில், பணம் கொடுத்தால் மட்டுமே மக்களின் கோரிக்கைகள் நிறைவேறுவதாகப் பகிரங்கக் குற்றச்சாட்டு! உதவி செயற்பொறியாளர் ஜீவானந்தம், பொதுமக்களிடம் கட்டாய லஞ்ச வசூலில் ஈடுபடுவதாக மாவட்ட ஆட்சியரிடம் புகார்! தண்ணீர் குளம் உள்ளிட்ட பல கிராம மக்களை அலையவிட்டு, லஞ்சம் கேட்டு மிரட்டுவதாக மின்வாரிய அதிகாரி மீது குற்றச்சாட்டு! அதிகாரிகளிடம் பலமுறை புகாரளித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை என மக்கள் கொந்தளிப்பு! தூய சக்தி ஆட்சியில் மின்வாரியத்தில் தலைவிரித்தாடும் ஊழல்.